<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>

<u>நாள்.02.12.2025</u>

<u>O.S. No.52/2018</u>

<u>வா.சா. 1</u>- பிருத்விராஜ்

<u>1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது சொந்த ஊர் எது என்றால் மேசையாபுரம். நான் கிராம நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அதிகாரியாக எத்தனை ஆண்டுகள் பணியாற்றினேன் என்றால் 33 ஆண்டுகள். எந்த ஆண்டு ஓய்வு பெற்றேன் என்றால் 2016 ம் ஆண்டு. இந்த வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால் 2018 ம் ஆண்டு. இந்த வழக்கின் 2 வது பிரதிவாதி கற்பகம் எனது தாயார், 3 வது பிரதிவாதி எனது தகப்பனார், 4 வது பிரதிவாதி எனது சகோதரி என்றால் சரிதான். எனது தகப்பனார் 21.07.1995 ல் எனது தாயாருக்கு குடும்ப ஏற்பாடு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல அது நன்கொடை ஆவணம். மேற்படி நன்கொடை ஆவணத்தில் நான் 1 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.673 க்கான பட்டா எனது தாயார் பெயருக்கு நன்கொடை ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். **<u>சாட்சி சர்வே எண்.673 க்கான பட்டா எண்.2160 தனது தாயார் பெயரிலான பட்டாவை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் 1 வது பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** எனது தகப்பனார் 21.07.1995 ல் எனது தாயாருக்கு குடும்ப ஏற்பாடு எழுதிக்கொடுத்தார் நான் வழக்கிற்காக நன்கொடை ஆவணம் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் கற்பகம் இந்த வழக்கினுடைய 1 வது பிரதிவாதிக்கு 17.03.2011 ல் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 17.03.2011 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் நான் 1 வது சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். 17.03.2011 தேதியிட்ட கிரைய ஆவணத்தினை அனுசரித்து 1 வது பிரதிவாதி பெயருக்கு புல எண்.673 க்கு பட்டா ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

**சாட்சி சர்வே எண்.673 க்கான பட்டா எண்.4430 1வது பிரதிவாதி பெயரிலான பட்டாவை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் 1வது பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் பசலி 1426 மற்றும் 1427 சாகுபடி அடங்கல் கணக்கு 1வது பிரதிவாதி பெயரில் சர்வே எண்.673 க்கு உள்ளது என்றால் சரிதான். **சாட்சி சர்வே எண்.673 க்கான பசலி 1426 மற்றும் 1427 சாகுபடி அடங்கல் கணக்கு 1வது பிரதிவாதி பெயரில் இருப்பதை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் 1வது பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் 27.02.2018 தேதியிட்ட பசலி 1427 க்கான 1வது பிரதிவாதி பெயரிலான தீர்வை ரசீது என்றால் சரிதான். **சாட்சி மேற்படி 1வது பிரதிவாதி பெயரிலான தீர்வை ரசீதினை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் 1வது பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 1வது பிரதிவாதி மேற்படி சொத்தினை அழகுதுரை என்பவருக்கு 09.01.2020 ல் விற்றுவிட்டார் என்றால் சரியல்ல சாட்சி தற்போது வழக்கு நடக்கும்போது விற்றுள்ளார் என சாட்சியம் அளிக்கிறார். மேற்படி அழகுதுரை 09.01.2020 அஜித் என்பவருக்கு மேற்படி சொத்தில் சில பகுதிகளை விற்றுவிட்டார் என்றால் தெரியாது. மீதி சொத்துக்களை அழகுதுரை 07.02.2020 ல் செல்வகுமார் என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்துக்களை அழகுதுரை கிரையம் பெற்று அஜித் மற்றும் செல்வகுமார் என்பவருக்கு விற்றுவிட்டார் மேற்படியார்கள் வசம் தான் தபசில் சொத்தின் அனுபவம் உள்ளது அழகுதுரை, அஜித் மற்றும் செல்வகுமார் ஆகியோரை சேர்க்காததால் இவ்வழக்கு அவசியத்தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு போடும் சமயத்திலேயே தபசில் சொத்தில் உரிமை இல்லை என்ற விபரம் தெரிந்தும், என் தாயார் கிரையம் கொடுத்துவிட்டார் என்ற விபரம் தெரிந்தும், மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 மோசடியாக எனக்கு தபசில் சொத்தில் உரிமை மூலம் மற்றும் அனுபவம் இல்லாமல் கிராம நிர்வாக அதிகாரியிடம் பெறப்பட்டு, தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதனால் வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் மூலமாக எனக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதியும் மற்றும் அவரது முன்பாத்தியஸ்தரும் கடந்த 23 வருடங்களாக என்னை தபசில் சொத்திலிருந்து உடமை நீக்கம் செய்து தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் அதனால் அவர்களுக்கு அனுபவ பாத்தியஸ்தை கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. எனக்கு 2வது பிரதிவாதியால் எழுதிக்கொடுத்த கிரையத்தையும், அதேபோல் 1வது பிரதிவாதியால் எழுதிக்கொடுத்த கிரையத்தையும், கேள்வி கேட்க எனக்கு எந்த தார்மீக உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள வில்லங்கப் பாராதீனம் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல ஏனெனில் ஏற்கனவே தபசில் சொத்துக்கள் 1வது பிரதிவாதியால் விற்கப்பட்டுவிட்டன என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் கிடையாது எனது வழக்கு சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போதே எனக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்ற விபரம் தெரிந்தும் நீதிமன்ற நேரத்தை வீண் அடிக்க வேண்டியும், பிரதிவாதிகளை கஷ்டநஷ்டப்படுத்த வேண்டியும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு நீதிமன்ற நடவடிக்கையை கேலிக்கூத்தாகும் வகையில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை எனது வழக்கு கற்பனையானது அதனால் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

**<u>4 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கோவில்பட்டியில் குடியிருக்கிறேனா என்றால் நான் 12 ஆண்டுகளாக திருச்சியில் குடியிருந்து வருகிறேன். எனது வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கோவில்பட்டியில் குடியிருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றால் முன்னால் குடியிருந்தோம் இப்போது குடியிருக்கவில்லை கோவில்பட்டியில் குடியிருப்பதாக சொல்லியிருப்பது தவறு தான். நான் கிராம நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அதிகாரியாக எத்தனை ஆண்டுகள் பணியாற்றினேன் என்றால் 33 ஆண்டுகள். நான் கிராம நிர்வாக அதிகாரியாக எந்த ஊர்களில் பணியாற்றினேன் என்றால் தென்காசி மாவட்டம், வரகனூரில் இறுதியாகப் பணியாற்றினேன் தென்காசி மாவட்டத்தில் தான் முழுவதுமாகப் பணியாற்றினேன். வழக்குச் சொத்துக்கள் முழுவதும் எனது தந்தைக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் தவிர எனது தந்தைக்கு வேறு சொத்துக்கள் உண்டு என்றால் சரியல்ல வேறு சொத்துக்கள் கிடையாது. மேசையாபுரத்தில் சுந்தர ரெட்டியார் மகன் சந்திர ரெட்டியார் என்பது எனது தந்தை மட்டும் தான் வேறு யாரும் கிடையாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.387 ன் படி சர்வே எண்.692, 703, 772 ஆகியவை குறித்து எனது தந்தை பெயருக்கு பட்டா உள்ளது மேற்படி சொத்துக்கள் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.387 ன் படி சர்வே எண்.692, 703, 772 ஆகியவை எனது தந்தைக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். **<u>சாட்சி மேற்படி தனது தந்தை பெயரிலான கணிணி நகல் பட்டா எண்.387 னை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் 4 வது பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** நான் தாவா சொத்தாக சர்வே எண்.673 ல் உள்ள ஏக்கர் 4 செண்ட் 6 க்கு வழக்குப் போட்டுள்ளேன் மேற்படி சொத்துக்கள் எனது தந்தைக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கு மேல்புறம் சந்திரன் ரெட்டியார் வகையறா நிலம் என காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

நானும், 1வது பிரதிவாதி நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். 4 வது பிரதிவாதி எனது சகோதரிக்கு பொதுக் குடும்ப சொத்திலிருந்து எந்த சொத்துக்களும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல சர்வே எண்.671 /1 மற்றும் 2ல் உள்ள சொத்துக்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.671 /2ல் 1 ஏக்கர் 61 செண்டினை அழகு ரெட்டியார் குமாரர் சண்முகையா, பெருமாள் ரெட்டியார் குமாரர் சோமசுந்தரம் ஆகியோர்கள் 2006ல் 4வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துளளார்கள் என்றால் சரியல்ல. 4வது பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்ற சர்வே எண்.671 /2ல் 1 ஏக்கர் 61 செண்டினை எனது சகோதரிக்கு பொதுக்குடும்ப சொத்திலிருந்து வழங்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.671/ 1 இடத்தை 4வது பிரதிவாதி குமாரர் சுபாஷ் சந்திரபோசுக்கு அழகு ரெட்டியார் குமாரர் சண்முகையா, பெருமாள் ரெட்டியார் குமாரர் சோமசுந்தரம் ஆகியோர்கள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 3வது பிரதிவாதி எப்போது இறந்தார் என்றால் மே மாதம் 2021ல் இறந்தார். என் அப்பாவுக்கு நான், 2வது பிரதிவாதி, 4வது பிரதிவாதி மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருக்கும்போது குடும்ப சொத்துக்கள் சம்பந்தமாக எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்றால் நீதிமன்ற உத்தரவின் பேரில் 1997ல் பாகப்பிரிவினை செய்துகொண்டோம். நான் சொல்லக்கூடிய நீதிமன்ற உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்துள்ளேன். நான் சொல்லக்கூடிய நீதிமன்ற உத்தரவு எதுவும் கிடையாது நான் வழக்கிற்காக பொய்யாக பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை நடக்கவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் என் அப்பாவுக்கு மேசையாபுரத்தில் 5-1/2 செண்ட் இடம் வீட்டுமனை, வீடு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை மறைத்து வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4வது பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என 1வது பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து இந்த வழக்கினை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 2011ம் ஆண்டு மாரியப்பன் ஏற்படுத்திய ஆவணங்களை செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேன். நான் பரிகாரம் கேட்டுள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு 2011ம் ஆண்டிலேயே தெரியும் என்றால் சரிதான், தெரியும். எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை நடக்கவில்லை வழக்கிற்காக 1997ல் நீதிமன்ற உத்தரவுபடி பாகப்பிரிவினை நடந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எனது தாயார் பெயரிலான பட்டா எண்.198 ல் உள்ள புல எண்.690/2A சொத்தானது எனது தந்தைக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். **<u>சாட்சி தாயார் பெயரிலான பட்டா எண்.198 ல் உள்ள புல எண்.690/2A க்கான கணிணி நகல் பட்டாவை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** எனது தாயார் எத்தனை வருடங்களாக என்னுடன் இருக்கிறார் என்றால் 60 வருடங்களாக என்னுடன் தான் இருக்கிறார். நான் எனது தாய், தந்தையை கவனிக்கவில்லை சொத்திற்காக அவர்களை கூட்டிச்சென்றேன் 4 வது பிரதிவாதி தான் தாய், தந்தையை கவனித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை நடக்கவில்லை எனது தங்கைக்கு சொத்து ஒதுக்கப்படவில்லை அவர் கிரையம் பெற்ற சொத்தை பாகத்தின்படி ஒதுக்கப்பட்ட சொத்து என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட 2 கிணறுகள், அதில் 5 H.P. Motor மற்றும் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறுகள் தனிப்பட்ட கிணறா அல்லது பங்காளிக் கிணறா என்றால் தனிப்பட்ட கிணறு தான். 4வது பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என 1வது பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து இந்த வழக்கினை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் 1வது பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் மோசடியானது மற்றும் பூர்வீக சொத்தை எனது அப்பா எனது அம்மாவுக்கு கொடுத்தது மோசடியானது என்றால் சரிதான். 1வது பிரதிவாதி அழகுதுரை விற்றுவிட்டார் அழகுதுரை பிளாட்டுகளாக பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

அழகுதுரை மற்றும் அவரிடம் கிரையம் பெற்ற பல நபர்களும் இவ்வழக்கிற்கு அவசியத்தரப்பு என்றால் சரியல்ல. என் அப்பா இறந்தபிறகு 4 வது பிரதிவாதி குடும்பச் சொத்துக்களில் பங்கு கேட்டு வருகிறார் என்றால் சரியல்ல. என் அம்மாவின் அப்பா பெயர் என்ன என்றால் வெஸ்காட் ரெட்டியார். அழகு ரெட்டியார் என்பது யார் என்றால் அப்பாவின் அம்மாவின் சித்தப்பா. 6 ஏக்கர் மாந்தோப்பு சொத்தானது என் அப்பாவுக்கு நன்கொடையாக அழகு ரெட்டியார் கொடுத்தார் என்றால் நன்கொடையாக கொடுக்கவில்லை பங்கு தான் கொடுத்தார். மேற்படி 6 ஏக்கர் மாந்தோப்பு சொத்தின் புல எண் என்ன என்றால் சர்வே எண்.696. மேற்படி 6 ஏக்கர் மாந்தோப்பு சொத்தினைப் பொறுத்து பாகப்பிரிவினை நடக்கவில்லை என்றால்சரியல்ல பாகப்பிரிவினை நடந்து மேற்படி 6 ஏக்கர் மாந்தோப்பு சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது. 4 வது பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என 1வது பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>4 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:41:51 +0530